செய்தி வெளியீடு எண்: 632 நாள்:24.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் அவர்களை இன்று (24.9.2019) சென்னை, ஆளுநர் மாளிகையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள்.

அந்த சந்திப்பின்போது, சென்னையில் உள்ள அனகாபுத்தூர், பல்லாவரம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலங்கள் கட்டி முடிப்பதற்கு தேவையான பாதுகாப்புத்துறைக்கு சொந்தமான நிலங்களை விரைவாக தமிழ்நாடு அரசுக்கு வழங்குவது குறித்தும், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்கு தேவையான பாதுகாப்புத்துறைக்கு சொந்தமான நிலங்களை துரிதமாக தமிழ்நாடு அரசுக்கு வழங்குவது குறித்தும் கோரிக்கை மனுவினை வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**